புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==========================================================================

# பக்தி இலக்கியத்தில் கும்பகோணத்தின் கும்பேசுவரர் ஆலயம்

*முனைவர் ரெ. நல்லமுத்து,*
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழாய்வுத்துறை,*
*தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,*
*திருச்சிராப்பள்ளி – 620002.*

==========================================================================

*ஆய்வுச் சுருக்கம்*

*பக்தி இலக்கியத்தில் பாடப்பெற்ற ஊர்கள் பற்றி ஆய்வு நடத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு, முதல் முயற்சியாக இந்த ஆய்வுக்கட்டுரை எழுதப்படுகிறது. கும்பகோணத்தின் சிறப்புகளையும், அங்கு நாயன்மார்கள் பாடிய தலமாக அமைந்துள்ள கும்பேசுவரர் கோயில் வரலாற்றை அறிந்து வண்ணம் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. ஊர்ப்பெயராய்வு மற்றும் கோயில் வரலாறு மையமாகக் கொண்டு இவ் ஆய்வு அமைந்துள்ளது.*

*முன்னுரை :*

*“திருக்குடந்தைஆதி கும்பேசர் செந்தாமரை*
*மரைக்குளகங்கைமகங்கா –விரிக்கரையின்*
*ஓரங்கீழ்கோட்டங்கா ரோணமங்கை நாயகியார்*
*சாரங்க பாணி தலம்” 1 (காளமேகப் புலவர்)*

*ஆதிகும்பேசுவரர் ஆலயம் குடந்தை என அழைக்கப்படும் கும்பகோணத்தில் மையப்பகுதியில் அமைந்துள்ளது. இந்த கோவிலில் உள்ள மூலவரை வைத்து தான் கும்பகோணம் என பெயர் வந்தது. கும்பகோணத்திலே மிகப்பெரிய கோவிலாகவும் தேவாரம் பாடல் பெற்ற 23வது சிவத்தலமாகவும் விளங்குகிறது. திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், அருணகிரிநாதர், மீனாட்சிசுந்தரனார் போன்ற பலரும் பாடிய பாடல் பெற்ற தலமாகும். மேலும் இத்தலத்தை பற்றியும் , மூலவரை பற்றியும், தலவரலாற்றை பற்றியும், கல்வெட்டு உணர்த்தும் செய்திகள், திருவிழாக்கள் பற்றியும் இக்கட்டுரையில் விரிவாக நாம் காண்போம்.*

*ஊர் அமைப்பு:*

*கவின் தரு தலைநிமிர் வானுயர் கோபுரங்களும் , கலை வளம் நிலைநாட்டும் சரசுவதி மகாலும், முத்தமிழ் புகழ் போற்றும் தமிழ்பல்கலைக்கழகமும் நிலைப்பெற புகழூட்டும் தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் அமைந்துள்ளது.இந்நகருக்கு வடபால் காவிரி நதியும் தென்பால் அரிசொல் நதியாகிய அரசலாறும் மாலை அணிந்ததுப்போல் காட்சி தரும் நதிக்கரை நகரம். நகரம் முழுவதும் வயல்களால் சூழப்பட்டு எழில்மிகு காட்சி தருகிறது பலசிறப்புகளை கொண்ட கும்பகோணம் சென்னைக்கு 270 கி.மீ தொலைவில் தெற்கிலும், திருச்சிக்கு 90 கி.மீ கிழக்கிலும், தஞ்சைக்கு 40 கி.மீ வடக்கிழக்கிலும் அமைந்துள்ளது.*

*கும்பகோணம்பெயர்காரணம் :*

*கும்பகோணம் என்ற பெயர் ஆங்கிலத்தில் “பாட்ஸ்கார்னர்” என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வூர், சங்க இலக்கியங்களில் குடந்தை ,குடமூக்கு, குடவாயில் போன்ற பெயர்களில் அழைக்கப்படுகிறது.*

*“கொண்டவன்உறை யங்குடமூக்கிலே” 2 (அப்பர்தேவாரம்)*

குடம் என்பதற்குக் கும்பம் என்ற பெயரும் உண்டு. மூக்கு என்பதற்கு, கோணம். வளைவு, போன்ற பல பொருள்களும் உண்டு.எனவே குடமூக்கு என்ற பெயர் கும்பகோணம் என மருவியது .பேருழிக்காலத்தில் பிரம்மன் வேண்டுகோளுக்கு இறைவன் தந்த அமுத கலசம் தங்கிய இடம் ஆதலால் கும்பகோணம் (குடமூக்கு) என பெயர் பெற்றது. மேலும் இதனைக் குறித்து விரிவாகத் தலவரலாற்றில் காண்போம்.

கோவில்அமைப்பு :

நகரத்தின் மையப்பகுதியில் உள்ள இத்திருக்கோவில் சூரியன் உதிக்கும் திசைப் பார்த்து அமைந்துள்ளது. இத்திருகோயிலில் இராஜ கோபுரம், கட்டை கோபுரம், கைலாச கோபுரம், மூலவர் கோபுரம் என நான்கு கோபுரங்களை கொண்டுள்ளது. கிழக்குத்திசை நோக்கி அமைந்துள்ள இராஜ கோபுரம் 128 அடி உயரத்தில் 9 கண்களைக் கொண்டு கம்பீரமாகக் காட்சித் தருகிறது.

முதல் பிரகாரம்

- தெற்குத் திசையில் நால்வர் சன்னதியும், அறுபத்து மூவர், சப்தகன்னிகள் சன்னதிகள் அமைந்துள்ளன. மேற்குத் திசையில் பிட்சாடனர், சுப்ரமணியர், சிவலிங்கங்கள், கஜலெட்சுமி, மகாலெட்சுமி, அன்னபூரணி சன்னதிகள் அமைந்துள்ளன.
- வடக்குதிசையில் மையத்தில் விநாயகர் சன்னதியும், பள்ளியறையும் அமைந்துள்ளது. கிழக்குத் திசையில் சூரியன் சந்திரன், கோவிந்த தீட்சிதர், நாகம்மாள் சன்னதிகள் அமைந்துள்ளன.

உட்பிரகாரம்

- நடுவில் மூலவர் ஆதி கும்பேசுவரர் சன்னதி அமைந்துள்ளது. நுழைவாயிலில் சண்டி, முண்டி என்ற காவல் தெய்வங்கள் உள்ளன. அந்த பிரகாரத்தில் மையப்பகுதியில் அதிகாரத்தில் காணப்படுகின்றது. வடக்குத் திசையில் நடராஜர் நாட்டிய கோலத்தில் காட்சித் தருகிறார்.

இரண்டாவதுபிரகாரம்

- தென்மேற்குத் திசையில்வல்லப விநாயகரும், வடமேற்குத்திசையில் முருகப்பெருமானும் உள்ளனர். தென்கிழக்கில் மடப்பள்ளி, யாகசாலை, இலட்சுமி நாராயணன் சன்னதியும் அமைந்துள்ளது. கீழ்நிலையில் நெடிய கொடிமரம் தங்கமுலாம் பூசப்பட்டுக் கம்பீரமாக நிற்கிறது.

வெளிபிரகாரம்

- தென்மேற்குத் திசையில் கும்பமுனி சித்தர் தியானித்த நிலையில் காட்சித் தருகிறார். அங்கு அருகாமையில் ஆதி விநாயகர் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். பல தூண்கள் நிறைந்த இடமாக வெளிபிரகாரம் காட்சித் தருக்கிறது.

மூலவர் பெயர்சிறப்புகள் :

உலகிற்கு ஆதிக்காரணமாகிய பராம்பரம் கும்பத்தில் இருந்து தோன்றியதால் ஆதிகும்பேசுவரர் என்றும் நிறைந்த சுவையுடைய அமுத்தத்தில் இருந்து உதித்ததால் அமுதேசர் என்றும் அழைக்கப்படுகிறார். திருஞானசம்பந்தர் தாம் பாடிய பதிகத்தில் இறைவனை குழகன் என்று அழைக்கிறார்.

''குரவிரிசோலை சூழ்ந்தகுழகன்குட மூக்கிடமா'' 3 (தேவாரம்)

சிவப்பெருமான் வேடர் உருவத்தில் தோன்றி அமுத கும்பத்தை அம்பால் எய்தபோது கிராத மூர்த்தி என்ற பெயரைப் பெற்றார்.

அம்பாள் பெயர்சிறப்புகள் :

அன்போடு தொழுவார்க்குத் திவ்விய மங்களத்தை அருளும் மாட்சியமையால் மங்கள நாயகி என்றும் சக்தி பீடங்களுள் ஒன்றான மந்திர பீடத்தில் விளங்குவதால் மந்திரபீடேசுவரி என்றும் மந்திரபீடத்தில் இருந்து நலம் தருவதால் மந்திரபீட நலத்தள் என்ற பெயரில் அழைக்கப்படுகிறார். திருஞானசம்பந்தர் இத்தலத்து இறைவியை வளர்மங்கை என சுட்டுகிறார்.

*"இழைவளர்மங்கையொடு மிருந் தானவனெம் மிறையே" 4(தேவாரம்)*

*ஆதி விநாயகர் :*

*இறைவன் இறைவியும் இத்தலத்துக்கு வருவதை அறிந்த விநாயகர் ஆதியிலே இத்தலம் அடைந்து இறைவன் இறைவியை எதிர்நோக்கி காத்திருந்ததால் இத்தல விநாயகர் ஆதி விநாயகர் என அழைக்கப்படுகிறார்.*

*கந்தன் :*

*கந்தன் சூரசம்காரத்திற்கு செல்வதற்கு முன்பு ஆறு முகங்களோடு இறைவன் இறைவியை வாங்கியதால் ஆறுமுகம் என பெயர் பெற்றார். முருகன் ஆறு முகங்களும் ஆறு திருக்கரங்களையும் கொண்டுக் காட்சி அளித்தார் என்றுபுராணம் சுட்டுகிறது. உட்பிரகாரத்தில் மேற்புறத்தில் இந்த அமைப்பு காணப்படுகிறது. வேறு இங்கும் இது போன்று இருப்பதாக அறியப்படவில்லை. மேலும் இத்தலத்து முருகபெருமானுக்கு அருணகிரிநாதர்,*
*''மலைதனில்வந்து வீதிதனில்நின்றுவாசமலர்சிந்து குழல்கோதி "5*
*என்று திருப்புகழில் பாடியுள்ளார்.*

*கும்ப வரலாறு :*

*உலகெல்லாம் அழிந்து விடும் மகாபிரளாயம் ஏற்படயிருப்பதை அறிந்த பிரம்மன், பிரளயத்திற்குப் பிறகு அழிந்த உயிரை எப்படி நான் படைப்பேன் என்று சிவப்பெருமானிடம் முறையிடுகிறார். அப்போது சிவப்பெருமான் பிரம்மதேவா !அஞ்சற்க! இப்போதே பல புண்ணிய தலங்களுக்குச் சென்று அங்குள்ள மணலை எடுத்து வந்து அமுதத்தைச் சேர்த்து மாய மயக்கும்பம் உருவாக்குக. அதில் அமுதம், பஞ்சபூத சக்தி, ஜீவ வித்துக்கள், போன்றவற்றை கும்பத்தில் இடுக. பிறகு தேங்காய், மாவிலை, தர்ப்பைப் புல், நூல் போன்றவற்றால் அலங்கரித்தார். மறைகள் சூல இமயமலையின் உச்சியில் வைத்திடுக என்றார். மகாபிரளயம் ஏற்படுகிறது. கடல்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து உலகை அழிக்கத் தொடங்கியது. எங்கும் மழை பெருங்காற்று ஆதலால் கும்பம் தென் திசையை நோக்கி மிதந்து வந்து ஓர் இடத்தில் தங்கியது அதுதான் கும்பகோணம். அமுதக் குடத்தை பின் தொடர்ந்து வந்த பிரம்மன் குடம் தங்கியதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். இதனை இமயமலையில் இருந்து சிவப்பெருமான் கண்டார். பிறகு சிவபெருமான், வேடர் கோலத்தில் வந்து அம்பை கொண்டு அமுத குடத்தின் மூக்கை உடைத்தார். அமுதம் நாற்றிசையும் சென்று ஆறாய் ஓடியது. அலங்கரித்த பொருட்கள் லிங்கங்களாக மாறின. உரி-சிங்கேசர் , வில்வம் –வில்வனேசர் , தேங்காய் – நாளிகேசரர் , பூணூல்-.யக்ஞோபவீதம் , பாணம் தொடுத்த இடம் பாண புரேசம் ஆகும். குரோசத்தூரம் சென்று விழுந்தது அவ்விடம் குடவாயில் ஆனது. பிறகு இறைவன் அமுதக் குடந்தை அணுகி அமுதத்தால் நனைத்து வெண்மணலை வாரி எடுத்து அவற்றை குடத்தில் சேர்த்து பிசைத்து லிங்கமாக்கினார். பிறகு வேடத்தைக் களைத்து லிங்கத்துக்குள் புகுந்தார். அந்தலிங்கமே ஆதிகும்பேசர் எனப்பட்டார். கும்பேசர் வந்த விதத்தை பற்றி மீனாட்சிசுந்தரனார் திருக்குடந்தைப் புராணத்தில் ,*

*"பூதமும்கடந்துபொறிகளும் கடந்து*
*புலன்களும்கடந்துமேற்கரண*
*பேதமும்கடந்துகலை முதலாகப்*
*பிறங்குமோர் ஏழோடு விந்து*
*நாதமுங்கடந்துவிளங்கும் ஓங்கொளியில்*
*நானிலம் உயர்ந்திட மதமும்*
*கோதமும் கடந்தோர் உளங்களை விழைந்தோர்*

*கும்பத்துதோன்றியதன்றே 6 (திருக்குடந்தை)*
*என்று கூறிகிறார்.*

*பிரம்மதேவன்வழிப்பட்டது :*

*கும்பத்துள் உறைந்த சிவபெருமானின் அற்புதக் காட்சியைக் கண்டு மகிழ்ந்த பிரம்ம தேவன் படைப்பு தொழிலைத் தொடங்கப் பெருமானை வேண்டித் தவம் கிடந்தார். இறைவனும்*

*காட்சிக் கொடுத்துப் படைப்புத் தொழிலைத் தொடங்க அருள்பாலித்தார். அதன் பொருட்டு உளம் மிகிழ்ந்த பிரம்மதேவன் சிவபெருமானுக்குமாசி மக திருவிழாவை நடத்தி வைத்தார். அதன்படியே ஆண்டு தோறும் திருவிழா நடைப்பெற்று வருகிறது.*

*கரும்பாயிரவிநாயகர் :*

*ஒரு காலத்தில் கும்பேசுவரரை வழிப்பட கரும்பு வியாபாரி ஆயிரம் கரும்பகளுடன் குளக்கரையில் தங்கினார். அப்போது விநாயகர் சிறுவன் வேடத்தில் வந்து ஓர் கரும்பைக் கேட்டான் தர மறுத்தார் வியாபாரி. கோபத்தில் கரும்பை எடுத்துச் சென்றுவிட்டான். பின் தொடர்ந்து சென்ற வியாபாரி கோவிலில் சென்ற அந்த சிறுவன் மறைந்தான். கரும்புகள் அனைத்தும் சாரங்கள் இல்லாமல் போனது. வியாபாரி விநாயகரை வேண்ட ஆயிரம் கரும்புகளை தந்து அருளினார். அதனால்அவருக்குக் கரும்பாயிர விநாயகர் என்று பெயர் வந்தது.*

*"புனல் கோட்டோர் வணிகன் பாங்கர்*
*ஒருகரும்புக் காயிரங்கொண்டுறு கரும்பா*
*யிரங்களிற்றை உளங்கொள் வோமே " 7*

*(திருக்குடந்தைபுராணம்)*

*மூர்க்க நாயனார்வரலாறு ;*

*தொண்டை நாட்டில் திருவேற்காடு என்னும் பகுதியில் வேளாளர் குலத்தைச் சார்ந்த ஒருவர் சிவனடியார்களே சிவன் என்று கருதி அவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்து கொடுத்தார். பணத்திற்காக பல சூதாட்டங்களில் வென்று அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்தார். இறுதியில் கும்பகோணம் வந்து முதலில் சூதாட்டத்தில் தோற்று பிறகு வெற்றிப் பெற்றார். இங்குள்ள சிவபெருமானை வணங்கி உயிர் நீத்தார்.*

*"தொண்டை வளநாட்டுவளர் வேற்காட்டூர்வாழ்*
*தொல்லுழவர் நற்சூதர் சூது வென்று… … … … …*
*கொள்கையினர் திருக்குடந்தை குறுகியுள்ளார்" 8 (புராணசாரம்)*

*கும்பமுனிவரலாறு :*

*சித்தர்களில் ஆதி சித்தராக போற்றப்படும் 64 பேரில் சிறப்புப் பொருந்தியவராகவும் முதன்மையானவராகவும் விளங்கியவர் கும்பமுனி சித்தர் ஆவார். ஒரு சமயம் கயிலையில் சிவபெருமானின் திருமணக் கோலத்தைக் காண தேவர்கள் அனைவரும் இமயமலையில் கூடினர். இவ்வாறு பலரும் வந்ததால் வடத்திசை தாழ்ந்தும் தென்திசை உயர்ந்தும் காணப்பட்டது. நிலத்தை சமன் செய்ய கும்பமுனியை தென் திசையை நோக்கிசொல்ல சொல்கிறார். கும்பமுனி சித்தரும் தென் திசையில் உள்ள பொதியமலை செல்லும் வழியில் கும்பேஸ்வரர் ஆலயம் அடைந்து பல நாட்கள் இங்கு தங்கி இருந்து பின்னர் அம்பாளை தரிசித்த படி ஜீவசமாதி அடைந்தார் என வரலாறு சுட்டுகிறது.*

*"முன்னமர்கும்பமுனியைநோக்கிமுற்றிய காதலினீதுரைப்பான்"*
*"கும்பேசர் மேயவாலயம்புக்கினதாகச் சூழ்ந்து " 9 (திருக்குடந்தைப் புராணம்)*

*தீர்த்தங்கள்வரலாறு :*

*மகாமக தீர்த்தம் :*

*மகாமக விழாவிற்கு முக்கிய அங்கமாக நகருக்கு நடுநாயகமாக கண்ணை கவரும் காட்சிகளுடன் சுற்றிலும் பல மண்டபங்களை கொண்டு காட்சியளிக்கிறது. அமுதகும்பத்திலிருந்து வழிந்தோடிய அமுதத்தின்ஒரு பகுதி தென்திசையில்வந்து தங்கியது. அவ்விடமே மகாமக தீர்த்தம். இந்த குளத்தில் கங்கை முதலா குமரி ஈறாக அனைவரும் நீராடி, அவர்களின் பாவங்களை போக்கக் கொள்வர்*

*"பூமருவும்கங்கைமுதல் புனிதமாம்பெருந்தீர்த்தம்*
*மாமகந்தான்ஆடுதற்கு வந்துவழி படுங்கோயில் "10*
*என்று சேக்கிழார் பெரியபுராணத்தில் சுட்டுகிறார்.*

காசிபதீர்த்தம் ;

காசிபமுனிவர் இத்தலத்திற்கு வந்து காவேரித்துறையில் நீராடி கும்பேசுவரை வழிபட்டார். அவர் நீராடிய இடம் காசிப தீர்த்தம் என்று பெயர். திருவிழா நாட்களில் கும்பேஸ்வரர் இங்கு வருவதுண்டு.

காமதேனுதீர்த்தம் ;

கும்பேசுவரர் கோயிலுக்கு வடக்கே காமதேனு என்னும் தேவப்பசு ஓர் தீர்த்தம் உண்டாக்கி சிவனை பூசித்து வழிப்பட்டது.அது காம தேனு தீர்த்தம் எனப்படுகிறது.

கந்தக்கூபம் :

முருக பெருமான் சூரபத்மன் முதலியோருடன் போர் செய்து வெற்றிப் பெற இக்கோவிலில் வடகிழக்கே ஓர் தீர்த்தம் கொண்டு சிவனை வழிப்பட்டார். அது கந்தக்கூபம் என பெயர் பெற்றது. இப்போது திருக்குளம் என அழைக்கப்படுகிறது.

தலச்சிறப்புகள் :

- திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் போன்றவர்களால். தேவாரம் பாடப்பெற்ற 26வது சிவத்தலமாகும். கண்ணைக்கவரும் எழில் மிகு காட்சியோடு கம்பீரமாக இராஜ கோபுரம் காணப்படுகிறது. சுற்றிலும் பெரிய மதில்களை காணமுடிகின்றது.
- இறைவன் கும்பத்தில் இருந்து வழிந்த அமுதத்தை வெண்மணலால் ஒன்று சேர்த்து ,அதனை லிங்கமாக உருவாக்கி தாமே “பிரதிஷ்டை”செய்து அதனுள் உட்புகுந்து சுயம்பு வடிவமானார். கும்பத்தில் இறைவன் தோன்றியதால் கும்பம் வடிவில் இத்திருத்தலத்தில் காட்சித் தருக்கிறார்.
- படைப்புத் தொழிலைத் தொடங்க இறைவன் அருள்பாலித்து அருளியதை போற்றும் முகமாக பிரம்ம தேவன் இத்தல இறைவனுக்கு தாமே முன்னின்று முதல் மாசிமகத் திருவிழாவை நடத்தினார் என்பது சிறப்புக்குரியதாகும். நிலவுலகில் செய்யப்பட்ட முதல் திருவிழா இதுவே. இதில் ஒன்பது நதிகளும் கலப்பதால் மக்கள் அனைவரும் இங்கு வந்து நீராடி தங்களுடையப் பாவங்களைப் போக்குவர்.

  “பசித்தோர்பாவப்பற்ற றுங்கங்கைநீர்
  உருசித்தோருக் குயர்பத மொன்றுமே
  வரிசைப்பார்புகழ் மகாமகக் கங்கை” 11

  என்று மகாமக தீர்த்தத்தைப் பற்றி மீனாட்சி சுந்தரனார் கூறுகிறார்.
- புராண செய்திகளின் படி சண்டி, கிருதமன், சுதன்மன், விரவன்மன், சுலோசனை, காசிபன், ஞானவான், சுவர்ணரோமன், கருமசன்மன் ஆகியோர் வழிப்பட்டுப் பேறுப் பெற்றார்கள்.

  “கோதையிருபங்கின் மேவவளர்கும்ப
  கோணநகர்வந்தபெருமாளே “ 12

என்று முதன் முதலில் கும்பகோணம் என்ற பெயரை அறிமுகம்படுத்தியவர் அருணகிரிநாதர் ஆவார்.

- தலமரமாக வன்னி மரம் விளங்குகிறது. அமுதகுடமானது பெருங்காற்றினால் குடத்தில் அணியப்பட்டிருந்த மாவிலை, புல், வில்வம், தேங்காய், பூ ,நூல் போன்றவை சிதறி விழுந்து லிங்கமாகமாறின. ஆனால் மாவிலை மட்டும் வன்னி மரமானது. இந்த வன்னி மரம் மொட்டை கோபுரம் அருகில் உள்ளது.
- இத்தலத்து இறைவனுக்காக கும்பேசர் குறவஞ்சி என்னும் நூலினை பாபநாச முதலியார் இயற்றியுள்ளார். குறவஞ்சி என்பது குறத்திப்பாட்டு, கும்பேசர் மீது காதல் கொள்ளும் ஓர் பெண்ணுக்குக் குறத்திக் குறி சொல்வது போல் இந்த நூல்அமைந்துள்ளது.

  “தரிசனம்பாவநாசம்என்றஅகல கிரிகள்இன்னம்
  சொல்லித் தொலையாதே அடிமாதே நான்” 13 (கும்பேசர் குறவஞ்சி)

- மேலும் இத்தலத்து அம்பாளுக்காக முத்து சுவாமி தீட்சிதர் அவர்கள் கீர்த்தனைகள் எழுதியுள்ளார்.

கட்டிடக் கலை :

இக்கோவில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சோழர் காலத்தில் கட்டப்பட்ட கோயிலாகும் .எண்ணற்ற தூண்களையும் தூண்களில் பல புடைப்பு சிற்பங்களையும் உருவாக்கி உள்ளானர். புடைப்பு சிற்பங்கள் ஒவ்வொன்றும் எழில்மிகு காட்சியோடு காணப்படுகிறது. இராஜகோபுரம் 128 உயரத்தில் 9 கண்களையும் 9 கலசங்களையும் கொண்டு காணப்படுகின்றது.

கோவிலைச் சுற்றியுள்ள மதிற் சுவர் யாரும் உள்ளே வராதவாறு பெரியதாக அமைந்துள்ளது. மதற்சுவற்றிலும் சில சிற்பங்கள் காணப்படுகின்றன. அம்மன் சன்னதியில் தூண்களில் செதுக்கப்பட்டுள்ள குதிரைச் சிற்பங்கள் கலைநயம் உடையவை. கொடிமரத்தின் அருகாமையில் உள்ள துவார பாலகர்களின் புடைப்பு சிற்பம் அற்புதமாக காட்சி தருகிறது. அம்மன் சன்னதி மண்டபத்தின் எதிரில் மேல் விட்டத்தில் ஆதி கும்பேசரின் வரலாற்றுச் சிற்பங்கள் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. கல் நாதஸ்வரம் காணப்படுகின்றது.

கல்வெட்டு உணர்த்தும்செய்திகள்

விசயாலய சோழன் (கி.பி 962-980) காலத்தில் தலைதூக்கிய சோழப் பேரரசு தஞ்சையை கைப்பற்றிக் கொண்டது. இக்காலத்தில் கும்பகோணத்தைத் தலைநகராகக் கொண்ட சோழ மன்னன் ஒருவன் கும்பேசுவரர் கோயிலை விரிவாக்கி கட்டிருந்தான் என்று நாகேசுவரர் கோயில் கல்வெட்டு கூறுகிறது. கயிலாய கோபுர வாயிலின் தென்புறம்உள்ளது. பெரியநந்தியுள்ள இடத்துக்குத் தென்புறம் உள்ள அறைக்கதவுகளில் காணப்படும் கல்வெட்டுசெவ்வப்ப நாயக்க மன்னன் செய்த திருப்பணியை சுட்டுகிறது. கி.பி 1550 கோவிந்த தீட்சிதர் அவர்களால் இராஜ கோபுரம், மகாமகக் குளம், சிறு சிறு கோவில்கள் திருப்பணி செய்து சேவப்ப நாயக்கர் முன்னிலையில் குடமுழுக்கு நடைபெற்றது என்று கல்வெட்டு உணர்த்துகிறது. காஞ்சி காமகோடி பீடம் சங்கராச்சாரியார் சுவாமிகள் பல திருப்பணிகள் செய்திருப்பதை அறியமுடிகிறது. கிருஷ்ணதேவராயர் மகாமக குளத்தில் நீராடிய செய்தியும் கிடைக்கின்றன. அதுமட்டுமல்லாம் பௌத்த சமயத்தை பற்றிய கல்வெட்டுகளும் உள்ளன. பௌத்த சமயத்தின் இறுதி சுவடுகள் இங்குக் கிடைக்கின்றன.

முக்கியதிருவிழாக்கள்:

மகாமகப் பெருவிழா :

மகம் என்பது 27நட்சத்திரங்களில் ஒன்று. இது கொண்டாடப்படுகின்ற காலத்தை "மகாமகம்" என்று கூறுகின்றதை அறியமுடிகிறது. சந்திரன் பூமியை முப்பது நாட்களுக்குள் சுற்றி வருகிறது என வானியலும், சோதிடமும் கூறுகிறது. சூரியன் , சந்திரன் போன்று மதிப்புடைய கிரகம் குரு ,குரு ஒவ்வொரு இராசியிலும் ஒவ்வொரு ஆண்டாக 12 இராசிகளில் சுற்றிவர 12 ஆண்டுகள் ஆகின்றன. சூரியனின் ஆட்சி வீடாகிய சிம்மத்தில் இருக்க, சிம்ம இராசிக்கு ஏழாவது வீடாகிய கும்பத்தில் சூரியன் இருந்து கொண்டு அங்கிருந்து தமக்கு ஏழாவது வீடாகிய சிம்ம இராசியில் குருவையும், சந்திரனையும் நேராகப் பார்க்கும் நாள் மகாமக நாளாகும். சிம்ம இராசிக்குரிய மகம், பூரம் ஆகிய இரு நட்சத்திரங்களும் உத்திரத்தில் நான்கிலொரு பாகமும் ஆகும். இந்நிலை 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் வரும். இவ்விழாவை முதலில் பிரம்மதேவன் தொடங்கி வைத்தார். ஆதிகும்பேசர் இந்தநாளில் மகாமக குளத்தில் வந்து காட்சி தருவார். மகாமகத்தின் போது கங்கை, யமுனை, கோதாவரி, சரசுவதி, குமரி, பயோடினி , சரயு, நருமதை போன்ற ஒன்பது நதிகளும் மகாமக குளத்தில்ஒன்று கூடும் .அப்போது மாந்தர்கள் அனைவரும் அந்த குளத்தில் நீராடி பாவங்களைபோக்குவர். இறுதியாக 2004 ஆம் ஆண்டு இந்த விழா நடைபெற்றது.

"கங்கையாகியநதிகளுங்கடவுண்மகாமகநீர்த்
துங்கமேவு நற்றடம்படிந்துறு துகடொலைத்து" 14 (சோமசுந்தரர்)

*சிறு திருவிழாக்கள் :*

*பங்குனி மாதம் மகாமக குளத்தில் தெப்ப திருவிழாவும், சித்திரை மாதத்தில் சப்தஸ்தான விழா நடைபெறும். அவ்விழாவில் கும்பேசர் மங்கள நாயகியுடன் பல்லக்கில் எழுந்தருளி 20கி.மீதூரம் வீதியுலா சென்று சாக்கோட்டை, திருக்கலயநல்லூர், தாராசுரம், திருவலஞ்சுழி, சுவாமிமலை, கொட்டையூர், மேலக்காவேரி ஆகிய ஏழு தலங்களுக்கு சென்று திரும்புவர். வைகாசி மாதம் திருக்கல்யாணம் நடைப்பெறும்.*

*முடிவுரை :*

*“தொண்டை ராகித்தொழுது பணிமினோ*
*பண்டை வல்வினை பற்றற வேண்டுவீர்15 (திருநாவுக்கரசர் - தேவாரம்)*

*நாவுக்கரசரின் வாக்கின் படி நாம் இங்கு வந்தால் நன்மை கிட்டும். இங்கு ஒரு முறை வருகையினால் இத்தலத்தின் வராலற்றை அறியவும், அவற்றை எழுத்துலகிற்கு இட்டுச் செல்லவும் முடிகின்றது. தமிழ் இலக்கியத்தில் பக்திக்கு என்று ஒரு இடம் உள்ளது. அவ்வாறு பக்தி இலக்கியத்தை ஆராய்ந்தால் இக்கோயிலின் வரலாற்றையும் பாடியவர்களின் வரலறாற்றையும் அறிந்துகொள்ள வாய்ப்பாக அமையும் என்பதில் மாற்று சிந்தனை இருக்காது.இத்தலத்தில் உள்ள இறைவனை வணங்கினால் வேண்டியது கிடைக்கும். இந்த தலத்தில் உள்ள மகாமக குளத்தில் நீராடி இறைவனை உருகி வேண்டினால் அவர்களுடைய பாவங்கள் எல்லாம்போகும் .என்பது தலத்தின் நம்பிக்கை. மேலும் மகாமக திருவிழாவில் ஒன்பது நதிகளும் ஒன்று கூடும். ஆதலால் இக்குளத்தில் நீராடினால் ஒன்பது நதிகளிலும் நீராடி உணர்வு ஏற்படும். மேலும் இக்கோவிலுக்கு வருகைப் புரிந்தால் இக்கோயில் பற்றிய வரலாறு, சிறப்புகள், தலத்திற்கு வருவதால் ஏற்படும் நன்மைகளை பற்றி அறியமுடியும். அதற்கு இவ்ஆய்வுக்கட்டுரை துணைநலன் பயக்கும்.*

**அடிக்குறிப்புகள்:**

1.தனிப்பாடல் திரட்டு–காளமேகப்புலவர்.
2. திருநாவுக்கரசர் தேவாரம் - ஐந்தாம் திருமுறை,ஆறாம் பாடல்.
3. திருஞானசம்பந்தர்தேவாரம் - மூன்றாம் திருமுறை,முதல் பாடல்.
4.திருஞானசம்பந்தர் தேவாரம் - மூன்றாம் திருமுறை,ஆறாம் பாடல்.
5. அருணகிரிநாதர் திருப்புகழ் - 867-ம்,பாடல் 2 முதல் 3 அடி
6. மீனாட்சிசுந்தரனார் - திருக்குடந்தைப்புராணம் - 29-ம்,பாடல். 1 முதல் 3 அடி
7. மீனாட்சிசுந்தரனார் - திருக்குடந்தைப்புராணம் - 29-ம்,பாடல். 4 முதல் 7 அடி
8. மீனாட்சிசுந்தரனார் - திருக்குடந்தைப்புராணம் - 16ம்,பாடல்,
9. மீனாட்சிசுந்தரனார் - திருக்குடந்தைப்புராணம் - 4ம்,பாடல்,
10. மீனாட்சிசுந்தரனார் - திருக்குடந்தைப்புராணம் - 3ம்,பாடல்,
11. சேக்கிழார்–பெரியபுராணம் - குடமூக்குபடலம்
12. மீனாட்சிசுந்தரனார் - திருக்குடந்தைப்புராணம் - 8ம்,பாடல்
13. அருணகிரிநாதர் திருப்புகழ் - 867-ம்,பாடல் 17 முதல் 18 அடி
14. பாபநாசமுதலியார்–கும்பேசர் குறவஞ்சி
15. திருநாவுக்கரசர் தேவாரம் - ஐந்தாம் திருமுறை,ஏழாம் பாடல்.

**துணைநின்ற நூல்கள்:**


1. திருநாவுக்கரசர் தேவாரம் - ஆருரம் இந்தியாபதிப்பகம், 2019 ஆண்டுபதிப்பு,
2. திருஞானசம்பந்தர் தேவாரம் - விசயாபதிப்பகம், 2015ம் ஆண்டுபதிப்பு,
3. திருஞானசம்பந்தர் தேவாரம் - விசயாபதிப்பகம், 2015ம்ஆண்டுபதிப்பு,
4. அருணகிரிநாதர்திருப்புகழ் - பிரேமாபிரசுரம், 2011ம்ஆண்டுபதிப்பு.
5. திருக்குடந்தைப்புராணம் - சென்னைநினைவுபதிப்பகம், 1950ல்,முதல் பதிப்பு.
6. ஆதிக்கும்பேசுவரர் ஆலய தலவரலாறு–தேவதானவெளியீடு, 1967ல்முதல் பதிப்பு.
7. சேக்கிழார்பெரியபுராணம் - உமாபதிப்பகம், 2012ம்ஆண்டுபதிப்பு.
8. திருக்குடவாயிற்புராணம் - வ.சு.சண்முகம், சூபிட்டர் பதிப்பகம் சென்னை, 1932ல் முதல் பதிப்பு.
9. தனிப்பாடல் திரட்டு–புலியூர்க்கேசிகன்,மங்கைவெளியீடு, 2010ம் ஆண்டு பதிப்பு


********* ********* ********** ********* ********* ********** ********** **********